மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 402. திரு. வ. சத்தியமூர்த்தி. மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்.

402—

சீர்மரபினர்கள் வீடு கட்ட மானியம்.

*4738—திரு. வ. சத்தியமூர்த்தி :

மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சீர்மரபினர்களுக்கு வீடு கட்டிக்கொள்ள மூன்றில் இரண்டு பங்கு செலவுத் தொகையை மானியமாக அரசு வழங்கி வந்த திட்டம் தற்போது கைவிடப்பட்டுவிட்டதா ?

(ஆ) ஆம் எனில், வரும் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : 1981—82 ஆம் ஆண்டிற்குப் பிறகு குறிப்பிட்ட தொகையில் வீடுகள் கட்ட இயலாததால் திட்டம் நிறுத்தப்பட்டு விட்டது. தற்போதுள்ள நிதி நிலையைக் கருத்தில் கொண்டு புதிய திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 403. திரு. வி. கே. சின்னசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

403—

உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம்.

*1340—திரு. வி. கே. சின்னசாமி :

மாண்புமிகு கல்விஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், பவானிசாகர் தொகுதி பனையம்பள்ளியில் ஐந்து ஏக்கர் நிலம் இருந்தும், அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டப்படாததை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?